# பயிற்சியாளர் வழிகாட்டி

# தேயிலைத் தோட்டப் பணியாளர்



Tea Plantation Worker

Trainer's Guide (Tamil)

**Qualifications Pack Tea Plantation Worker**

- **SECTOR: AGRICULTURE**
- **SUB-SECTOR: Horticulture**
- **OCCUPATION: Plantation Crop Cultivation**
- **REFERENCE ID: AGR / Q 0204**

IL&FS Skills

N·S·D·C
National
Skill Development
Corporation

# பொருளடக்க அட்டவணை


வரவேற்புக் குறிப்பு ........................................................................................................1

ஒரு பயிற்சியாளரின் பங்களிப்பு ....................................................................................3

கீழ்கண்ட பொதுவான நன்னடத்தையை கடைபிடிக்கவும் .................................................4

வகுப்பு திட்டம் ............................................................................................................7

## அலகு 1: தேயிலைப் பயிரிடுதல் குறித்த அறிமுகம் .........................................26

தேயிலை பற்றிய சுவாரஸ்யமான உண்மைகள்

- மண் மற்றும் தேயிலைப் பயிரிடுவதற்குத் தேவையான விவசாய-தட்பவெப்பம்

## அலகு 2: பதியன்களுக்கான தாய்ச்செடி தோட்டம் .............................................33

- பதியன் கன்றுகளுக்கான தாய்ச்செடி தோட்டத்தை தயார் செய்தல்
- தாய்ச்செடி தோட்டத்தை பராமரித்தல்

## அலகு 3: நாற்றங்கால் வளர்ப்பு .........................................................................40

- இடம் தேர்ந்தெடுப்பு மற்றும் நாற்று உருவாக்கும் முறைகள்
- நாற்றங்காலின் வகைகள்
- நாற்றங்காலில்மண் தயாரிப்பு மற்றும் உறை நிரப்பல்
- வெட்டுகளை தயார்ப்படுத்தல்
- வெட்டுத் துண்டுகளை நடுதல்
- விதை மூலம் நாற்று தயாரித்தல்
- நாற்றங்கால் செடிகளை பராமரித்தல்
- நிழல் அளித்தல் மற்றும் பக்குவப்படுத்துதல்

## அலகு 4: நடவு தோட்ட நிலத்தை சரிபடுத்துதல் மேலும் நடவு ...............66

- நிலம் தயாரிப்பு
- நடுதல்
- அடையாளக் கட்டைகள் மற்றும் குழிகளை உருவாக்குதல்
- இளம் தேயிலைத் தோட்டப் பராமரிப்பு


2013 © IL&FS Skills Development Corporation Limited

அலகு 5: ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை........................................91

மண் பரிசோதனை மற்றும் மண் திருத்தங்களுக்காக மண் மாதிரி

- ஆர்கானிக் மற்றும் ஆர்கானிக் இல்லாத உரங்களைப் பயன்படுத்துதல்
- களைக் கட்டுப்பாடு
- மண்ணின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த கலாச்சார பயிற்சிகள்

அலகு 6: பாசனம் மற்றும் வடிகால்....................................................................108

பாசனம் மற்றும் வடிகால்

அலகு 7: ஒருங்கிணைந்த நோய் மற்றும் பூச்சி மேலாண்மை......................118

- முக்கியமான பூச்சிகளுக்கான அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு அளவீடுகள்
- முக்கிய நோய்களுக்கான அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு அளவீடுகள்
- பூச்சி நிகழ்வின்போது கலாச்சார செயல்பாடுகள் மற்றும் அவற்றின் தாக்கம்
- கருவிகள் மற்றும் உபகரணத்தை கையாளுதல்
- பூச்சிக்கொல்லிகளை கையாளும்போது பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள்
- முதலுதவி

அலகு 8: பயிற்சி மற்றும் கவாத்து செய்தல்.....................................................155

இளம் தேயிலை கவாத்து செய்தல்

- வளர்ந்த தேயிலை கவாத்து செய்தல்
- கவாத்து மற்றும் வீச்சு கவாத்து செய்முறை

அலகு 9: தேயிலை அறுவடை ..................................................................173

- அறுவடை செய்தலின் முக்கியத்துவமும் முக்கியக் காரணிகளும்
- உச்சி உடைத்தல் மற்றும் இலை பறித்தல்
- சுய தூய்மை
- இலை பறிப்பு (அறுவடை)
- எந்திர முறை அறுவடை
- இலை பறிப்பு (அறுவடை)

தொழில்சார் திறன்கள்

மாதிரி ஆய்வு............................................................................................ 63/174

கள பார்வை

நாற்றங்காலை பார்வையிடல் ....46
ஒரு தேயிலை தோட்டத்திற்கு செல்லுதல்....92
தேயிலை தொழிற்சாலையைப் பார்வையிடல் ....173

மென் திறன்கள்

கூட்டுப் பணி ....62
பணி நன்னெறிகள் - 1 ....78
பணி நன்னெறிகள் - 2 ....104
நேர்மை ....114
பணி நன்னெறிகள் - 3 ....169

வகுப்பு முறையில் மதிப்பீடு

பயிற்சிக்கு முந்தைய மதிப்பீடு ....27
பயிற்சிக்கு பிந்தைய மதிப்பீடு ....198

மதிப்பிடுதல்

மதிப்பீடு – 1 ....65
மதிப்பீடு – 2 ....107
மதிப்பீடு – 3 ....154
மதிப்பீடு – 4 ....1796

2013 © IL&FS Skills Development Corporation Limited

## தொகுதி 6: பாசனம் மற்றும் வடிகால்

| அமர்வு | பயன்படுத்தப்பட்ட மூலங்கள் | காலம் |
|---|---|---|
| மீண்டும் பார்த்தல் | ◆ பயிற்சியாளர் வழிகாட்டி | 15 நிமிடங்கள் |
| பாசனம் மற்றும் வடிகால் | ◆ பயிற்சியாளர் வழிகாட்டி<br>◆ பங்கேற்பாளர் கையேடு<br>◆ போஸ்டர் | 1 மணி 30 நிமிடங்கள் |
| நேர்மை | ◆ பயிற்சியாளர் வழிகாட்டி | 1 மணிநேரம் |
| ஒரு தேயிலை தோட்டத்திற்கு செல்லுதல் | ◆ பயிற்சியாளர் வழிகாட்டி<br>◆ பங்கேற்பாளர் கையேடு | 2 மணிநேரங்கள் |

## மீண்டும் பார்த்தல்

### நோக்கம்

இந்த பிரிவை முடித்த பிறகு, பயிற்சி பெறுபவர்களால் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்:

- "ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச்சத்து நிர்வகித்தல்" அமர்வில் படித்தவற்றை மீண்டும் பார்த்தல்.

### சொல்லுங்கள்

- "ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச்சத்து மேலாண்மை" தொகுதியை ஒரு விளையாட்டு மூலம் மீண்டும் தொடங்கலாம்.
- பலகையில் உருப்படிகளின் பட்டியலும் சில தகவல்/பெயரிடப்பட்ட சில சீட்டுகளும் இங்கே உள்ளது.
- ஒவ்வொரு குழுவும் ஒரு சீட்டை சுழற்சி முறையில் எடுக்க வாய்ப்பளிக்கப்படும்.
- எடுக்கப்பட்ட சீட்டில் உள்ள தகவல்/பெயரைப் பார்த்து பட்டியலிருந்து சரியான உருப்படியை தேர்வுசெய்ய வேண்டும் இது தான் பணி.
- சரியாக கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு உருப்படியும் பட்டியலிருந்து அழிக்கப்படும்.

- ஒவ்வொரு குழுவுக்கும் விவாதித்து பதலளிக்க 2 நிமிடங்கள் வழங்கப்படும்.
- மதிப்பெண் அளித்தல் பின்வருமாறு: நிலை ஒன்றில் சரியான பதிலுக்கு 10 புள்ளிகள்; பதிலளிக்காமல் கடத்திவிடப்பட்ட சீட்டுக்கு 5 புள்ளிகள்.

## செய்யுங்கள்

- வகுப்பறையை 3 குழுக்களாக பிரிக்கவும்.
- பதில்கள்/உருப்படிகளை பலகையில் பட்டியலிடவும்.
- சீட்டுகளை கலைத்து முதலாவது குழுவிலிருந்து பங்கேற்பாளர் ஒருவரை ஒரு சீட்டை எடுக்கச் சொல்லவும்.
- பங்கேற்பாளரை தனது குழுவுடன் விவாதம் செய்து பதிலுடன் வருமாறு அனுமதிக்கவும்.
- பதில் சரியாக இருந்தால், சீட்டில் உள்ள தகவலை குழுவிலுள்ள பங்கேற்பாளர் மூலம் படிக்கச் சொல்லவும்.
- பதில் தவறாக இருந்தால், சீட்டை அடுத்த குழுவுக்கு அனுப்பவும்.
- குழுக்களினால் சரியான பதிலை அளிக்க முடியவில்லை என்றால், சரியான பதிலை கொடுக்கவும்.
- அனைத்து சீட்டுகளும் பயன்படுத்தப்படும் வரை விளையாட்டைத் தொடரவும்.
- விளையாட்டிற்கான உருப்படி பட்டியல் மற்றும் சீட்டுகள்:



2013 © IL&FS Skills Development Corporation Limited

| உருப்படி பட்டியல் (பலகையில் எழுத்தப்பட வேண்டியது) | | சீட்டுகளுக்கான தகவல் |
|---|---|---|
| 1. | வளையம், அரை-நிலவு, பரப்பல் | உரக்கலவை பயன்பாட்டு முறை |
| 2. | 4.5 மற்றும் 5.5 | தேயிலை வளர்ச்சிக்கு பொருத்தமான மணல கார அமில நிலை (pH) |
| 3. | டால்மைட் பயன்பாடு | மண் கார அமில நிலை (pH) 4.5 க்கு குறைவாக இருக்கும்போது |
| 4. | FYM | நிலையான வளர்ச்சி, உற்பத்தி மற்றும் மண்ணில் உள்ள குறைபாடுகளை மறுநிரப்பல் செய்ய அளிக்கப்படுகிறது |
| 5. | மண் மாதிரி எடுத்தல் பெயரிடல் தகவல்கள | தோட்டத்தின் பெயர், பிரிவு எண், மண்ணின் வகை: மேல் அல்லது அடி மண் மற்றும் மண்-சோதனைக்கான காரணம். |
| 6. | மண் மாதிரி எடுத்தல் பெயரிடல் தகவல்கள | தோட்டத்தின் பெயர், பிரிவு எண், மண்ணின் வகை: மேல் அல்லது அடி மண் மற்றும் மண்-சோதனைக்கான காரணம். |
| 7. | அலுமினியம் சல்பேட் | மண் கார அமில நிலை (pH) 5.5 க்கு அதிகமாக இருக்கும்போது |
| 8. | 1% இலிருந்து 2% | மண்ணில் பரிந்துரைக்கப்படும் கனிம வளத்திற்கான வரம்பு |
| 9. | கைக்கலவை பயன்பாடு | செடிகள்இரண்டு கொத்துக்களின் வளர்ச்சியை அடையும்போது தொடங்குதல் |
| 10. | கைமுறை, இயந்திரம், இரசாயனம் களைக் கட்டுப்பாடு முறை | களைக் கட்டுப்பாடு முறைகள் |

## பாசனம் மற்றும் வடிகால்

### நோக்கம்

இந்த பிரிவை முடித்த பிறகு, பயிற்சி பெறுபவர்களால் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்:

- மண்ணின் பரிமாற்ற விளைவுகள், நிலத்தில் நிலை மற்றும் பயிர் வளர்ச்சி மற்றும் அதன் விளைச்சலுக்கான நீர் கிடைக்கும் தன்மை ஆகியவற்றை விளக்கவும்;
- கொடுக்கப்பட்டுள்ள மண் வகை மற்றும் சூழ்நிலை நிலைகளுக்கு ஏற்ப நேரமுறை மற்றும் சரியான பாசனம் மற்றும் வடிகால் வசதியை விவரிக்கவும்;
- நிலத்தின் சரிவு மற்றும் மண்ணின் வகையைப் பொறுத்து நீர்ப்பாசனம் செய்யவும்;
- முறையான சுத்தம் மற்றும் களையெடுத்தல் மூலம் வடிகால் அமைப்பை பராமரிக்கவும்.



2013 © IL&FS Skills Development Corporation Limited

## சொல்லுங்கள்

பாசனம்

- தாவரங்களுக்கு அதன் வளர்ச்சிக்கு ஈரப்பதம் தேவைப்படும். இந்த ஈரப்பதம் மழைப்பொழ்வின் மூலம் பெரும்பாலும் கிடைக்கும். தாவரங்கள் அதன் உணவு தயாரிப்புக்காக அதை எடுத்துக்கொள்ளும்.
- நீராவி செயல்முறையின் காரணமாகவும் ஈரப்பதம் இழக்கப்படும். வறண்ட மாதங்களில், அக்டோபர் முதல் மார்ச்/ஏப்ரல் வரை, மழைப்பொழிவை விட ஆவியாதல் அதிகமாக இருக்கும். எனவே நீர்ப்பாசனம் முக்கியமாகிறது.
- பாசனத்தில் மூன்று முக்கிய வகைகள் உள்ளது: நீர்ப் பாசனம்: இயற்கையான நீர் ஆதாரத்தை தாவரப் பகுதிக்கு வடிகால் செய்தல். தெளிப்பு பாசனம்: தாவர பகுதியில் சரியான இடைவெளியில் தெளிப்பான்களை வைக்கவும். சொட்டுநீர் பாசனம்: நீர் பற்றாக்குறையான பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. தாவரங்களைச் சுற்றி சொட்டுநீர் பாசனமுறை நிரந்தரமாக அமைக்கப்படுவதால் நீர்ச் சொட்டுகள் நேரடியாக வேர் பகுதிக்கு செல்கிறது.

சில செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை பின்வருமாறு:

- கடைசி மழைக்கு பின்னர் ஒன்றரை வாரம் வரை மண் உலர்வாக இருக்கும்போது பாசனத்தை தொடங்கவும்.
- இரண்டு பாசனத்திற்கான இடைவெளி களிமண்ணை விட உலர் மண்ணில் குறைவாக இருக்க வேண்டும்.
- மழைப்பொழிவைப் பொறுத்து பாசனத்தை நிறுத்தவும்.
- தொடர்ச்சியாக இரண்டு மூன்று நாட்கள் 3 முதல் 4 செமீ மழைப்பொழிவு இருந்தால் மட்டுமே நீர்ப்பாசனத்தை நிறுத்தவும்.
- தெளிப்பான்களை பயன்படுத்தி பாசனம் செய்யபடும்போது ஒரு தெளிப்பானிலிருந்து வரும் நீர் இரண்டாவது தெளிப்பானின் நீருடன் படும்படி இரண்டு தெளிப்பான்களுக்கு இடையேயான இடைவெளி இருக்கவேண்டும்.
- சரியான அழுத்தத்தை பின்பற்ற, தயாரிப்பாளர் வழங்கும் வழிமுறையைப் பின்பற்றவும். கழிவுநீர் அமைப்பு
- கால்வாய் அமைப்பு தேயிலை செடிகள் வளர்வதற்கு ஈரப்பதம் மிகவும் முக்கியம், ஆனால் அதிகமான ஈரப்பதம் மோசமானது.
- எனவே, வடிகால்களை அமைப்பதன் மூலம் அதிகப்படியான நீரை வெளியேற்றுவது தேவைப்படுகிறது.

- வடிகாலின் ஒட்டுமொத்த அமைப்பு என்பது ஒரு சிரமமான செயல், இது மண் அளவு, நிலத்தின் சரிவு, ஆண்டு மழைப்பொழிவு, வெளியேறும் பகுதியிலிருந்து உள்ள தூரம் ஆகியவற்றை பொறுத்தது. எனவே வடிகால் அமைப்பு ஒன்றை முறையான ஆய்வு மற்றும் வல்லுநர்களின் வழிகாட்டியின் படி அமைப்பது பரிந்துரைக்கப்படுகிறது.
- நீரோட்டம் இல்லாத பீடபூமிகள் மற்றும் சமவெளிகளில் வடிகால் முக்கியமானது.
- எனினும், சரிவுகளில், கூடுதல் நீர் வடிந்தோடும்போது மண் அரிமானத்தை தவிர்க்க வடிகால் அமைப்பு தேவைப்படும்.

## செய்யுங்கள்

- வடிகால் அமைப்பின் இடைவெளி மற்றும் பரிமாணங்களை விளக்க விளம்பரங்களைப் பயன்படுத்தவும்.
- முதன்மை வெளியேட்டிலிருந்து வடிகால்கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது என்பதை விளம்பரத்தைப் பயன்படுத்தி காண்பிக்கவும்.

## செய்யுங்கள்

- வெவ்வேறு நீர்ப்பாசன முறைகளை விவரிக்கவும்.
- வீச்சு மற்றும் மேற்பொருந்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் படத்தின் உதவி கொண்டு தெளிப்பான் முறை இடைவெளி விடுதலைப் பற்றி விவரிக்கவும்.

## சொல்லுங்கள்

- தென்னிந்தியாவில் தேயிலை மலைச்சரிவுகளில் பயிரடப்பட்டுள்ளதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம், இங்கு தண்ணீரானது சாய்வான பகுதிகளிலிருந்து எளிதாக வழிந்தோடி விடும் இதனால் எந்த வடிகால் அமைப்பும் தேவையில்லை. எனவே சரிவுகளில் நாம் எப்படி ஈரம் மற்றும் மண்ணை பாதுகாப்போம்?
- தென்னிந்தியாவில் பொதுவாக எடுத்துக்கொள்ளப்பட்ட மண் மற்றும் ஈரப்பதம் பாதுகாப்பு முறைகள் சிலவற்றை நாம் பார்ப்போம்.
- தென்னிந்தியாவில் நவம்பர் முதல் மார்ச்/ஏபரல் மாதங்கள் வரை உலர் நிலை இருக்கும். புதிய தோட்டமிடல்/மறு தோட்டமிடல் பகுதிகளில் ஈரப்பதத்தை பாதுகாக்க எதிரெதிரே அகழிகளுடன் சம உயர கால்வாய்கள் உருவாக்கப்படுகிறது.



2013 © IL&FS Skills Development Corporation Limited

- தேயிலை செடிகளின் வரிசைகளுக்கு இடையே இருக்கும் நடக்கும் பகுதிகளில் மண்ணில் தோண்டப்படும் செவ்வக வடிவ குழிகளே அகழிகளாகும். பரிமாணங்கள் பொதுவாக 1 அடி அகலத்திலும்; 1.5 அடி ஆழத்திலும் 6 அடி நீளத்திலும் இருக்கும். இரண்டு அகழிகளுக்கு இடையேயான இடைவெளி 6 அடி.
- மழைக் காலங்களுக்கு பிறகு அகழிகளில் உள்ள மண் குவிப்புகள் நீக்கப்பட்டு நிலங்களில் வெளியே பரவி விடப்படும். சிலநேரங்களில் இந்த அகழிகளில் கவாத்து ஈற்றுகளை புதைக்க பயன்படுத்தப்பட்டு அடுத்த பருவத்தில் புதிய அகழிகள் உருவாக்கப்படுகிறது.
- மழைக் காலங்களில் சரிவுகளில் மண் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு; கற்சுவர்கள் (கோட்டை), செங்குத்து வடிகால்கள் மற்றும் சமஉயர வடிகால்கள் அமைக்கப்படுகின்றன.

## உதவிக்கான குறிப்புகள்

- நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் அமைப்புகள் குறித்த கேள்விகளைக் கேட்டு விரைவு மறுபார்வையை வழங்கவும்.

# நேர்மை

## நோக்கம்

இந்த பிரிவை முடித்த பிறகு, பயிற்சி பெறுபவர்களால் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்:

- வாழ்வின் மதிப்புகளை மனதிற்கொள்ளுதல்

## செய்யுங்கள்

- நேர்மை பற்றிக் கூறும் இக்கதைகளை படிக்கவும்.

**நேர்மையான டாக்ஸி ஓட்டுனர்**

- பிலிபைன்ஸ் நாட்டில் 1996 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு உண்மை கதை.
- பிலிபைன்ஸில் ஒரு டாக்ஸி ஓட்டுனர் இருந்தார்.
- ஒரு பணக்கார பயணர் 34 லட்சங்கள் மதிப்புள்ள பணம் மற்றும் நகையை டாக்சியில் மறந்து விட்டு சென்றார்.
- இந்த பணத்தை எடுத்துக் கொண்டு திரும்ப கொடுக்காமல் மறைத்திருந்தால் டாக்ஸி ஓட்டுனர் சென்றிருந்தார் மிகப்பெரிய பணக்காரராக இருந்திருக்கலாம்.

- ஆனால் அவர் நேர்மையுடன் இருந்தார். தன் டாக்ஸியில் வந்தவரை தேடி கண்டு பிடித்து அனைத்தையும் திருப்பிக் கொடுத்தார்.
- அந்த பணக்காரர் டாக்ஸி ஓட்டுனருக்கு வெகுமதி அளித்தார். அந்த வெகுமதி அவர் ஏற்க மறுத்துவிட்டார். அவரின் நேர்மையை ஒவ்வொருவரும் அறிய தொடங்கினர்.
- இதன் விளைவாக பிலிபைன்ஸ் அரசாங்கம் அவரின் குழந்தைகள் கல்வி செலவை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் புதிய டாக்ஸி ஒன்றையும் அவருக்கு அளித்தது.
- டாக்ஸி ஓட்டுனரின் கஷ்டங்கள் அனைத்தும் அவரது நேர்மை காரணமாக முழுமையாக நீக்கியது.

**வணிக வியாபாரியாக இருந்து சிறைப் பறவையானார்**

- புதிதாக தொழிலைத் தொடங்கிய ஒரு தொழிலதிபரின் உண்மை கதை இது. அவரின் தொழில் வளர்ந்து விரிவடைந்தது.
- ஆனால் தனது தொழிலை நேர்மையின்மை மற்றும் ஏமாற்று முறையில் அவர் உருவாக்கினார்.
- தனது அடுத்த தலைமுறைக்கு தேவையான போதுமான செல்வத்தை அவர் சேகரித்தார்.
- அவரின் சொத்து மற்றும் சந்தோசம் நீண்ட நாள் நிலைத்திருந்ததா? எப்படி இருக்கும்? அடித்தளம் ஆடினால், கட்டிடம் எப்படி நிலைத்திருக்கும்?
- மக்கள் இந்த உண்மையை அறியத் தொடங்கினர். அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது.

**காந்திஜியின் சத்திய சோதனைகள்**

- காந்திஜி இளம் வயதில் இருக்கும்போது, தனது மாமா வீசியெறிந்த சிகரெட் துண்டுகளை எடுத்தார்.
- விளையாட்டுக்காக புகைபிடிக்க ஆரம்பித்தார்.
- ஒரு நாள் தனது தவறை உணர்ந்தார்.
- மிகவும் அதிகமான துயரத்துடன் இருந்த அவர் தற்கொலை செய்து கொள்ள விரும்பினார்.
- வாழ்க்கையை முடித்து கொள்வதை விட புகைபிடிப்பதை விடுவது சிறந்தது என்று பின்னர் புரிந்து கொண்டார்.



2013 © IL&FS Skills Development Corporation Limited

- நாம் தவறாக ஒன்றை செய்துவிட்டோம் அதை மறுத்து தன்னைத் தானே அழித்துக் கொள்வதை விட உண்மையை எதிர்கொள்வது சிறப்பானது என்று உணர்ந்தார்.
- இந்த கதையை கேட்பவருக்கும் சொல்வதன் மூலம் முடிக்கவும்.
- தனது தவறுகளை சந்திக்க தைரியம் இல்லாத கோழை மட்டுமே தனது வாழ்க்கையை முடித்துக் கொள்வான்.

### உதவிக்கான குறிப்புகள்

- வகுப்பறையில் கதைகளை விளக்கிய பின்னர் ஒரு உரையாடலை தொடங்கவும்.
- தங்கள் எண்ணங்களுடன் பயிற்சி பெறுபவர்கள் வரட்டும்.
- "ஆம்" மற்றும் "இல்லை" என்று அவர்கள் பதிலளிக்கும் வகையிலான கேள்விகளைக் கேட்கவும்.
- கேள்விகளை இரண்டு தலைப்புகளில் குறித்துக் கொள்ளவும்: Y மற்றும் N. "ஆம்" என்பது அதிகமாக இருப்பது "Y" என்ற தலைப்பின் கீழும், "இல்லை" என்பது அதிகமாக இருப்பது "N" என்ற தலைப்பின் கீழும்.
- "ஆம்" என்று சொல்பவர்களிடம் அவர்கள் ஏன் அப்படி சொன்னார்கள் என்று கேட்கவும்.
- "இல்லை" என்று சொல்பவர்களுக்கும் இதையே செய்யவும்.

## ஒரு தேயிலை தோட்டத்திற்கு செல்லுதல்

### நோக்கம்

இந்த பிரிவை முடித்த பிறகு, பயிற்சி பெறுபவர்களால் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்:

- தேயிலை தோட்டத்தில் இருக்கும் பாசனம் மற்றும் வடிகால் அமைப்பை பார்க்கவும்.

## செய்யுங்கள்

- அருகில் இருக்கும் தேயிலை தோட்டத்திற்கு வகுப்பறையில் உள்ளவர்களை அழைத்து செல்லவும்.
- தேயிலை செடிகளில் உள்ள இலைகளைப் பார்த்து, தாவரத்தில் எவ்வளவு ஈரப்பதம் உள்ளது என்பதை பயிற்சி பெறுபவர்களிடம் கேட்கவும்.
- ஈரப்பதம், காலநிலை மற்றும் அந்த நேரத்தில் உள்ள பருவத்துடன் தொடர்புடைய பாசன தேவைகளைப் பற்றி விவாதிக்கவும்.
- ஈரப்பத நிலையை சோதித்து பாசன தேவையைப் பற்றி விவாதிக்கவும்.
- வடிகால்கள்/அகழிகளுக்கு இடையேயான இடைவெளி மற்றும் பரிமாணத்தை மீண்டும் நினைவுகூறவும்.
- அளவு, சரிவு மற்றும் பராமரிப்பைப் பொறுத்து ஏற்கனவே உள்ள வடிகால்களின் நிலைகளை விவாதிக்கவும்.
- தேயிலை தோட்டத்தில் ஏற்கனவே உள்ள வடிகால் அமைப்பில் ஏதேனும் மாற்ற அளவீடுகள் தேவையா என்பதை விவாதிக்கவும்.

## உதவிக்கான குறிப்புகள்

- நிலத்தை சுற்றிப் பார்க்கும் பயணத்தின்போது அவர்களின் அறிந்து கொண்டவற்றை பயிற்சி பெறுபவர்களிடம் கேட்கவும்.



2013 © IL&FS Skills Development Corporation Limited

IL&FS | Skills

**IL&FS Skills Development Corporation Limited**

(A Joint Initiative with National Skill Development Corporation)

**Regd. Office:** IL&FS Skills Development Corporation Limited,
1st, 2nd & 3rd Floor, NTBCL Building, Toll Plaza, DND Flyway, Noida - 201 301. U.P., India.
Tel.: (0120) 2459200 / 2459201. www.isdc.in

**Mumbai Office:** IL&FS Education & Technology Services Ltd.,
Aditya Textile Industrial Compound, Corduroy Building, 2nd Floor, Safed Pool, Andheri-Kurla Road,
Mumbai - 400 072. Tel.: 022-6780 9292. www.ilfseducation.com